இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி




Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 234 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 21 – வெள்ளிக்கிழமை 04 ஏப்ரல் 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 234 : Thiruvalluvar Year - 2056 - Panguni 21 - Friday 04 April 2025 - Dak 16 Pages ₹ 5.00

## தமிழ்நாடு போராடும்! நிச்சயம் அதில் வெற்றி பெறும்!

# வக்ஃபு மசோதாவை எதிர்த்து தி.மு.க. உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரும்!

## சட்டமன்றத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.4.2025) சட்டமன்றப் பேரவையில், நாடாளுமன்ற மக்களவையில் வக்ஃபு சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளதைக் கண்டித்து உரையாற்றினார்.

**சென்னை, ஏப்.4-**

**சட்டபேரவையில் நேற்று உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சர்ச்சைக்குரிய வக்ஃபு சட்டத்திருத்தத்திற்கு எதிராக தி.மு. கழகம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரும் என்றும் - வக்ஃபு வாரியத்தின் தன்னாட்சியை அழித்து, இஸ்லாமிய மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒன்றிய அரசின் சட்டத்துக்கு எதிராக தமிழ்நாடு போராடும். அதில் வெற்றியும் பெறும் எனவும் உறுதிபடக் கூறினார்.**

இந்திய நாடாளுமன்ற மக்களவையில் வக்ஃபு சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளதைக் கண்டித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.4.2025) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை வருமாறு:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 27.03.2025 அன்று இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்றினோம். இந்தியத் திருநாட்டின் மத நல்லிணக்கத்திற்கும் சிறுபான்மையின இஸ்லாமிய சமுதாய மக்களுக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில், 1995ஆம் ஆண்டின் வக்பு சட்டத்தினைத் திருத்துவதற்கு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு சட்டத் திருத்த முன்வரைவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்ற தீர்மானம் பா.ஜ.க. நீங்கலாக அனைத்துக் கட்சிகளாலும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்றப்பட்டது.

**கடும் எதிர்ப்பையும் மீறி மக்களவையில் வக்ஃபு சட்டத்திருத்தம்!**

இந்தியாவில் இருக்கும் பெரும்பாலான அரசியல் கட்சிகளால் இந்த வக்ஃபு சட்டத் திருத்தம் எதிர்க்கப்பட்டது. இவை அனைத்தையும் மீறி நாடாளுமன்ற மக்களவையில் வக்பு சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டிருப்பது மிகுந்த கண்டனத்துக்குரியது. வக்பு சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிராக 232 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள். ஆதரவாக 288 உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள்.

> **“இந்தியாவில் இருக்கும் பெரும்பான்மைக் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி ஒரு சில கூட்டணிக் கட்சிகளின் தயவால் அதிகாலை 2 மணியளவில் இத்தகைய சட்டத்தை நிறைவேற்றி இருப்பது இந்திய அரசியல் சட்டத்தின் கட்டமைப்பின் மீது செய்யப்பட்ட தாக்குதல்; மதநல்லிணக்கத்தைக் குலைக்கும் செயல். இதனை உணர்த்தும் வகையில் கருப்புச் சின்னத்தை அணிந்து இன்றைய பேரவை நடவடிக்கைகளில் நாங்கள் பங்கெடுக்கிறோம்.”**

இந்தச் சட்டத் திருத்த மசோதாவானது நிறைவேற்றப்பட்டு இருந்தாலும் எதிர்த்து வாக்களித்தவர்களின் எண்ணிக்கை 232 என்பது சாதாரணமான எண்ணிக்கை அல்ல, எண்ணிக்கை கூடுதலாகக் கிடைத்து இருக்கலாம். ஆனால், இந்தச் சட்டத் திருத்தம் எதிர்க்கப்பட வேண்டியது மட்டுமல்ல; முழுமையாகத் திரும்பப் பெற வேண்டியது என்பதுதான் நம் கருத்து. அதைத்தான் நாம் இங்கே தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பியிருந்தோம்.

**அரசியல் சட்டத்தின் கட்டமைப்பின் மீது தாக்குதல்!**

இந்தியாவில் இருக்கும் பெரும்பான்மைக் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி ஒரு சில கூட்டணிக் கட்சிகளின் தயவால் அதிகாலை 2 மணியளவில் இத்தகைய சட்டத்தை நிறைவேற்றி இருப்பது இந்திய அரசியல் சட்டத்தின் கட்டமைப்பின் மீது செய்யப்பட்ட தாக்குதல்; மதநல்லிணக்கத்தைக் குலைக்கும் செயல். இதனை உணர்த்தும் வகையில் கருப்புச் சின்னத்தை அணிந்து இன்றைய பேரவை நடவடிக்கைகளில் நாங்கள் பங்கெடுக்கிறோம்.

சர்ச்சைக்குரிய இந்த சட்டத்திருத்தத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்படும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**இசுலாமிய மக்களை அச்சுறுத்தும் சட்டம்!**

வக்ஃபு வாரியத்தின் தன்னாட்சியைஅழித்து, சிறுபான்மை இசுலாமிய மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒன்றிய அரசின் சட்டத்துக்கு எதிராக தமிழ்நாடு போராடும்! போராடும்! போராடும்! அதில்வெற்றியும்பெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசியலமைப்புச் சட்டத்தின் மீதான தாக்குதலை சட்டபூர்வமாகவே தடுப்போம் என்று இந்த மாமன்றத்தில் உறுதி அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## மூக்கையா தேவருக்கு உசிலம்பட்டியில் மணிமண்டபம்!

# சென்னையில் காரல்மார்க்ஸுக்கு திருவுருவச் சிலை!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஏப்.4-**

**சட்டபேரவையில் நேற்று, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 110 விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், மூக்கையா தேவருக்கு உசிலம்பட்டியில் மணி மண்டபம் அமைக்கப்படும் எனவும், பொதுவுடைமைத் தத்துவத்தை வடிவமைத்த புரட்சியாளர் காரல்மார்க்ஸுக்கு சென்னையில் திருவுருவச் சிலை நிறுவப்படும் எனவும் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் அளித்த அறிக்கை வருமாறு:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி எண் 110ன்கீழ் இரண்டு முக்கியமான அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

முதலாவது அறிவிப்பு; உலக மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களைப் பெருமைப்படுத்திட, போற்றிட இந்த திராவிட மாடல் அரசு விரும்புகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**பொதுவுடைமைத் தத்துவத்தை வடிவமைத்த புரட்சியாளர்!**


உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள் என்ற பிரகடனத்தை, உலகத் தொழிலாளர்கள் அனைவருக்குமான ஒரே முழக்கமாக பொதுவுடைமைத் தத்துவத்தை வடித்துத் தந்த புரட்சியாளர் காரல் மார்க்ஸ் அவர்கள். இழப்பதற்கென்று எதுவுமில்லைபெறுவதற்கோ பொன்னுலகு இருக்கிறது என்ற நம்பிக்கை விதைகளை விதைத்தவர்! அறிவுலகத் தொலைநோக்குச் சிந்தனையாளர்!

வரலாற்றில் பலரும் பிறக்கிறார்கள்; பலர் வரலாற்றுக்குத் தொண்டாற்றி இருக்கிறார்கள். ஆனால், வரலாற்றின் போக்கினையே மாற்றி அமைத்தவர்கள் சிலர் தான். அந்த ஒரு சிலரில் தலைமகனாகப் போற்றப்படுபவர் கார்ல் மார்க்ஸ் அவர்கள்.

உலகப் புரட்சிகளுக்கும், இந்த உலகம் இதுவரை அடைந்துள்ள பல்வேறு மாற்றங்களுக்கும் அடித்தளம் அமைத்தது அவரது சிந்தனைகள் தான். அப்படிப்பட்ட ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற சிந்தனையோடுதான், அவரது நினைவு நாளான கடந்த மார்ச் 14ஆம் நாள், நம்முடைய நிதிநிலை அறிக்கையை இந்தப் பேரவையில் தாக்கல் செய்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**காரல் மார்க்ஸின் அறிக்கையை தமிழில் வெளியிட்ட பெரியார்!**

இந்தியாவைப் பற்றி யாரும் எழுதாத காலத்தில், மிகச்சரியாக இந்தியாவைப் பற்றி எழுதியவர் அவர்தான். “தீர்க்க முடியாத முரண்பாடுகள் உள்ள



பல்வேறு இனங்கள், குலமரபுகள், சாதிகள், சமயக் கோட்பாடுகள், அரசுகள் ஆகியவைகளை ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்டிருக்கிற புவியியல் ஒற்றுமையைத்தான் இந்தியா என்று அழைக்கிறோம். இந்தியாவின் கடந்த காலத்தில் அரசியல் எவ்வாறு மாறிய போதிலும் சமுதாய நிலை மாறவில்லை. எது எப்படி இருந்தாலும் சரி, அந்த மகத்தான, கவர்ச்சிகரமான தேசம் ஒரு காலத்தில் மறுமலர்ச்சி அடைவார்கள் என்று உறுதியாக எதிர்பார்க்கலாம்” என்று எழுதியவர் காரல் மார்க்ஸ் அவர்கள்.

அதனால்தான் மார்க்ஸ்எங்கெல்ஸ் எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்த்து 1931ஆம் ஆண்டே வெளியிட்டார் தந்தை பெரியார் அவர்கள். அத்தகைய மாமேதை மார்க்ஸ் அவர்களது உருவச் சிலை தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமையடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**சென்னை மாநகரில் மாமேதையின் சிலை!**

நூறு ஆண்டுகளுக்கு முன்பே தொழிற்சங்க இயக்கம் கோலோச்சிய இந்த சென்னை மாநகரில் அந்த மாமேதையின் சிலை அமைவது பொருத்தமானது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, இரண்டாவது அறிவிப்பு;

அகில இந்திய பார்வர்டு பிளாக் தலைவரும் உறங்காப்புலி என்று போற்றப்பட்டவருமான திரு. பி. கே.மூக்கையாதேவர் அவர்களுக்கு நாளை 103ஆவது பிறந்தநாள்!

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 1923ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் நாள் அவருடைய பிறந்த நாள். இளம் வயதில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நம்பிக்கையைப்



பெற்று பார்வர்டு பிளாக் கட்சியில் இணைந்தார்.

**மக்கள் நாயகனாக வலம் வந்தவர் மூக்கையா தேவர்!**

சுதந்திர இந்தியாவின் முதல் தேர்தலில் 1952ஆம் ஆண்டு பெரியகுளம் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். அதன்பிறகு 1957, 1962, 1967, 1971, 1977 ஆகிய தேர்தல்களில் தொடர்ந்து உசிலம்பட்டி தொகுதியில் வெற்றிவாகை சூடியவர் மூக்கையா தேவர் அவர்கள். 1971ஆம் ஆண்டு இராமநாதபுரம் நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு வென்றவர். ஒரே தொகுதியில் தொடர்ச்சியாக வென்று மக்கள் நாயகனாக வளர்ந்தவர் அவர்.

**மூக்கையா தேவரின் கோரிக்கையை ஏற்ற அண்ணா!**

1967ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நடைபெற்றபோது பேரறிஞர் பெருந்தகை அண்ணாவுக்கு தோள் கொடுத்தவர் பி.கே.மூக்கையா தேவர் அவர்கள். அப்போது இந்தப் பேரவையில் தற்காலிகப் பேரவைத் தலைவராக இருந்த அவர்தான் அன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கச்சத்தீவு ஒப்பந்தத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முழங்கியவரும் அவர்தான். தேவர் சமுதாய மக்களுக்காக கல்வி நிறுவனங்கள் உருவாக்க வேண்டும் என்று முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் கோரிக்கை வைத்தவரும் அவர். அதனால்தான் கமுதி, உசிலம்பட்டி, மேலநீலிதநல்லூர் ஆகிய இடங்களில் அரசு கல்லூரிகள் கழக ஆட்சியில் அப்போது அமைக்கப்பட்டன.

‘நியாயத்துக்கு ஒரு மூக்கையா’ என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பட்ட பி.கே.மூக்கையா தேவர் அவர்களை சிறப்பிக்கும் வகையில், உசிலம்பட்டியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவிப்பதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பினை வெளியிட்டார்.

## வக்ஃபு வாரிய சொத்துக்களை அபகரித்துள்ளதாக - மாநிலங்களவையில்

# மல்லிகார்ஜூன கார்கே மீது அபாண்ட குற்றச்சாட்டு!

## பா.ஜ.க. எம்.பி., அனுராக் தாக்கூரைக் கண்டித்து - ‘இந்தியா’ கூட்டணி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, ஏப்.4-

மல்லிகார்ஜுன கார்கே மீது பா.ஜ.க., எம்.பி., அனுராக் தாக்கூர் சுமத்திய அபாண்ட குற்றச்சாட்டை கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாநிலங்களவையில் பேசிய பா.ஜ.க., எம்.பி., அனுராக் தாக்கூர், வக்ஃபு வாரிய சொத்துக்களை கார்கே குடும்பத்தினர் அபகரித்துள்ளதாக குற்றம் சாட்டினார். அடிப்படை ஆதாரமற்ற அவரது இந்த அபாண்ட குற்றச்சாட்டுக்கு காங்கிரஸ்,

தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

தனது பேச்சுக்கு அனுராக் தாக்கூர் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என வலியுறுத்தி மாநிலங்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். மேலும், நாடாளுமன்ற வளாகத்தில் அவர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

முன்னதாக மாநிலங்களவையில் பேசிய மல்லிகார்ஜுன கார்கே, அனுராக் தாகூரின் குற்றச்சாட்டுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார். அனுராக் தாக்கூர் மன்னிப்பு கேட்க வேண்டும் என வலியுறுத்திய அவர், குற்றச்சாட்டை நிரூபித்தால் தனது எம்.பி., பதவியை ராஜினாமா செய்யத் தயார் என்றும், அதேநேரத்தில், குற்றச்சாட்டை நிரூபிக்கவில்லை என்றால் அனுராக் தாக்கூர் ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.